# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.12/2024** **நாள் : 01.02.2024**

## கிழக்கு கடற்கரை சாலையில், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளில் ரூ.495.23 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் இன்று (01.02.2024) ஆய்வு மேற்கொண்டார்.

கிழக்கு கடற்கரை சாலையில், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளில் ரூ.495.23 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப. அவர்கள் இன்று (01.02.2024) ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களால் ரூ.418.20 கோடி மதிப்பீட்டில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம் மற்றும் ரூ.77.03 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கு 06.11.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக சாலை வெட்டும் பணிகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது

வடகிழக்குப் பருவமழை முடிவுற்றதைத் தொடர்ந்து சாலை வெட்டும் பணிகளுக்கு நெடுஞ்சாலைத் துறை அனுமதி வழங்கியதன் அடிப்படையில் குழாய் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இன்று (01.02.2024) மேலாண்மை இயக்குநர் அவர்கள் பணிகளை ஆய்வு மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இத்திட்டத்தின் மூலம், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை ஆகிய பகுதிகளில் உள்ள 12,776 குடியிருப்புகளுக்கு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்படும். இதன் மூலம், 1 இலட்சத்து 3 ஆயிரத்து 971 பொதுமக்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தின் கீழ், 17 கழிவுநீர் உந்துநிலையங்கள் அமைக்கப்பட்டு 139.54 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்கள் பதிக்கப்படும். மேலும், 24.66 கி.மீ நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு 1,633 இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்படும்.

மேலும், நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளின் மூலம் அப்பகுதியில் உள்ள 4,986 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதன் மூலம் 42 ஆயிரத்து 206 பொதுமக்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தின் கீழ் 51.651 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படும். மேலும், 525 மீட்டர் நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு 22 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை

நீர்த்தேக்கத் தொட்டியும், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்கப்படும்.

இவ்வாய்வின்போது, தலைமைப் பொறியாளர் திரு.ஆர்.கண்ணன், மேற்பார்வைப் பொறியாளர் திருமதி.உ.பர்வீஸ் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater